

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சுக்கிலநத்தம், மீனாட்சிபுரம், திருவிருந்தாள்புரம், வெள்ளையாபுரம், ஆமணக்குநத்தம், கல்லுப்பட்டி, குளுந்தம்பட்டி, வதுவார்பட்டி, போடம்பட்டி ஆகிய கிராமங்களில் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திமுக முன்னாள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து, என் தொகுதி மக்களுக்கு தேவையான அனைத்து பணிகளையும் செய்து கொடுப்பேன் என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, செட்டிக்குறிச்சி பிராபகரன், திமுக ஒன்றிய செயலாளர்கள் பால கணேசன், பொன்ராஜ், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வேலுச்சாமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பாலசந்தர், வழக்கறிஞர் பாஸ்கரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சுரேஷ், இளைஞர் அணி அழகு ராமானுஜம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் தகுதித் தேர்வு: தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை 4-
அரசு பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், ஜூலை 4 மற்றும் 5ஆம் தேதிகளில் நடைபெறும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில், குறிப்பிட்ட பாடத்தின் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ள தங்களுக்கு தொடர்பில்லாத கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களிலிருந்து 60 மதிப்பெண்களுக்கு கேள்விகள் கேட்பதால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பாடங்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள் நிர்ணயித்து தேர்வு நடத்தும் வகையில் அறிவிப்பாணையை திருத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியுள்ளனர்.

இந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மைத்ரேயி சந்துரு, தமிழ் பாடத்தில் கல்வித் தகுதியை பெற்றவர்தான் தமிழை பயிற்றுவிக்கிறார்; ஆங்கில பாடத்தில் கல்வித் தகுதியை பெற்றவர்தான் ஆங்கில பாடம் நடத்துகிறார்; ஆனால் இவர்கள் தங்களுக்கு தொடர்பில்லாத கணிதம் மற்றும் அறிவியல் தேர்வு எழுதிய நிரபந்திக்கப்படுகிறார்கள்; இது அவர்களுக்கு பாதாகத்தை ஏற்படுத்துவதாக வாதிட்டார். இந்த வாதத்தை கேட்ட நீதிபதி, மனுதாரர்களின் கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும், கடைசி நேரத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 6 மாதங்களுக்கு ஒருமுறை தகுதித் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதால், அடுத்த தேர்வில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலித்து அதற்கு ஏற்றபடி அறிவிப்பாணையை வெளியிட தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டிற்கான முதலீடுகளைக் குறிவைக்கும் ஆந்திரா!

## த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா? – பொருளாதார வல்லுநர்கள் கேள்வி!

சென்னை, ஜூலை 4 -
தமிழ்நாட்டிற்கான முதலீடுகளை ஆந்திரா குறிவைத்து வருகிறது. இதனை தடுக்க த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா என பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்கள் ஆலை அமைக்க வசதியாக சிப்காட் எனும் தொழிற்பூங்காவை தமிழ்நாடு அரசு கடந்த காலங்களில் இருந்து அமைத்து வருகிறது. அதன்படி, பல்வேறு பெரு நிறுவனங்களும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் தொழில் தொடங்கவே விரும்புகின்றன.


இச்சூழலில் கடந்த தி.மு.க. ஆட்சியின் போது திருவள்ளூர் மாநெல்லூர் பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பணிகள் நிறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் இப்பணிகள் முழு வேகத்தில் நடைபெறவில்லை.

இந்நிலையில், தமிழ்நாடு உடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த நிறுவனங்களின் முதலீடுகளை, ஸ்ரீசிட்டி தொழிற்பூங்காவை விரிவாக்கம் செய்து ஈர்க்க ஆந்திரா முயற்சித்து வருகிறது. இதற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு உடனடியாக முட்டுக்கட்டை போட வேண்டும் என பொருளாதார வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே, பல்வேறு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் முதிர்ச்சியற்ற அரசு மற்றும் ஊசலாடும் அரசியல் சூழல் காரணமாக முதலீடுகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றியது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குடந்தை அ.இராஜாராமன்
ஜூலை 4 (2020)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# மனமகிழ் மன்றங்களில் தனி நபர்கள் ஆய்வு செய்யத் தடை!

மதுரை, ஜூலை 4-
மனமகிழ் மன்றங்களில் அதிகாரிகளைத் தவிர தனி நபர்கள் ஆய்வு செய்யவும், வீடியோ எடுத்து பதிவிடவும் அனுமதி கிடையாது என உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

ரீல்ஸ் எடுப்பதற்காக ஆய்வு என்ற பெயரில் மனமகிழ் மன்றங்களில் புகுந்து ஆளுங்கட்சியினர் பிரச்சினை செய்வதாகக் குறிப்பிட்டு தமிழ்நாடு மனமகிழ் மன்ற உரிமையாளர் சங்கம் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஆணை பிறப்பித்துள்ளது.

# முன்பணம், பிடித்தம் தொகை என பி.எஃப். விதிகளில் மாற்றம்!

சென்னை, ஜூலை 4-
வருங்கால வைப்பு நிதியில், ஊழியர்கள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில், மாதம் ஆயிரத்து 800 ரூபாய்க்கு மேல் செலுத்தும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. பிஃஎப் நிதியில் இருந்து முன் பணமாக 75 சதவீதம் வரை எடுத்துக் கொள்ளலாம் எனவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதியில், கட்டாய பங்களிப்புத் தொகை ஆயிரத்து 800 ரூபாயாகநிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் தொகையை விருப்பத்தின்பேரில் தொழிலாளர்கள் செலுத்தும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி, தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தில் 12 சதவீதம் என்ற அடிப்படையில், மாதம் ஆயிரத்து 800 ரூபாய் கட்டாய பங்களிப்புத் தொகை இருந்து வருகிறது. தற்போது அதற்கு மேலும் ஓய்வூதிய சேமிப்பை அதிகரிக்க விரும்பும் தொழிலாளர்கள், கூடுதல் தொகையை விருப்ப அடிப்படையில் பி.எஃப் கணக்கில் செலுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பி.எஃப் கணக்கிலிருந்து முன்பணம் எடுக்கும் விதிகளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தகுதியான இருப்புத் தொகையில் ஊழியர் மற்றும் நிறுவனம் செலுத்திய பங்களிப்பு தொகைகளில் இருந்து 75 சதவீதம் வரை முன்பணமாக எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பி.எஃப் உறுப் பினர்கள் தங்களது கணக்கில் உள்ள மொத்த பங்களிப்பில் குறைந்த பட்சம் 25 சதவீதத்தை இருப்பு வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, ஊழியர்களின் விருப்பத்தின் பேரில் ஆயிரத்து 800 ரூபாயை விட அதிகத் தொகை பிடித்தம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பது பெரிய அளவில் பயனளிக்காது என கூறப்படுகிறது.

## அமோனியா வாயு கசிவு - பலி எண்ணிக்கை 18ஆக உயர்வு !

# மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் பலி!

திருவள்ளூர், ஜூலை 4-
திருவள்ளூரில், இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிந்து ஏற்பட்ட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேர் கிராமத்தில் உள்ள இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் கடந்த 21ஆம் தேதி அம்மோனியா வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தைகள் என 80க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 40க்கும் மேற்பட்டோர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த ஒடிசாவைச் சேர்ந்த அலத்தி ஜுவாங்கா என்பவர் சிகிச்சைப் பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இதனால், அமோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது. மேலும் சிலரது நிலைமை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

## செஞ்சியில் காலாவதியான சாக்லேட் சாப்பிட்ட

# 18 பள்ளி மாணவ-மாணவிகள் மயக்கம்! அரசு மருத்துவமனை தீவிர பிரிவில் அனுமதி!

## விஜயகுமார், மொக்தியார் அலி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல்!

செஞ்சி, ஜூலை 4-
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி விழுப்புரம் சாலையில் ஊரா ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது இப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் 34 மாணவ மாணவிகள் படிக்கின்றனர் இந்த வகுப்பில் படிக்கும் காவியா ஸ்ரீ என்ற மாணவிக்கு பிறந்த நாளையடுத்து மாணவி பள்ளிக்கு வரும் வழியில் உள்ள ஒரு பங்கடையில் சாக்லேட் பாக்கெட் வாங்கி வந்து வகுப்பில் படிக்கும்மாணவ-மாணவிகளுக்கு கொடுத்துள்ளார்.

சாக்லேட்டை பிரித்து சாப்பிட்ட ரோபோ ஸ்ரீ, லேகா ஸ்ரீ, விஷ்ணு, ஆகாஷ், குமார் உள்ளிட்ட 18 மாணவ மாணவிகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டு மயக்கம் அடைந்தனர்.

இது குறித்து மாணவர்கள் பள்ளி ஆசிரியர்களிடம் தெரிவித்தவுடன் ஆசிரியர்கள் உடனடியாக அனைவரையும் செஞ்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பள்ளி குழந்தைகளுக்கு அரசு தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் வேணுகோபால் தலைமையிலான மருத்துவர்கள் பரிசோதனை செய்து உடனடியாக முதல் உதவி சிகிச்சை அளித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட மாணவ மாணவிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும் குழந்தைகளுக்கு தேவையான அனைத்து மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டும் என அரசு மருத்துவர்களிடம் அவர்கள் அறிவுறுத்தினர்.

மேலும் இதுகுறித்து செஞ்சி காவல் ஆய்வாளர் விநாயக முருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன்வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன்உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆகியோர்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காலாவதியான சாக்லேட்டை விற்றகடையில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர் மணி உள்ளிட்ட உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு விசாரணை செய்து வருகின்றனர்.

## மாணவிகள் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை!

# கீழப்பாவூர் அரசு கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தத்தை உடனடியாக இடமாற்றம் செய்க!

## தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் கோரிக்கை மனு!

தென்காசி, ஜூலை 4-
தென்காசி தெற்கு மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங்கிடம் கொடுத்துள்ள கோரிக்கை மனு விவரம் வருமாறு.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தாலுகா, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கழுநீர்குளம் ஊராட்சி பகுதியில் தமிழ்நாடு அரசின் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் ஆயிரத்திற் கும் மேற்பட்ட மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தினமும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை நம்பியே கல்லூரிக்கு வந்து செல்கின்றனர்.

இக்கல்லூரிக்கென அரசு மகளிர் கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தம் என்ற பெயரில் அமைக்கப் பட்டுள்ள பேருந்து நிறுத்தம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் (TNRSP) பணியின் போது கல்லூரி நுழைவு வாயிலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக மாணவியர்கள் நான்கு வழிச்சாலையை கடந்து பேருந்தில் ஏறவும்,இறங்கிய பின்னர் மீண்டும் சாலையை கடந்து கல்லூரிக்குச் செல்லவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்கிலிருந்து கிழக்கே அதிவேகமாக வரும் வாகனங்களால் மாணவி யர்கள் உயிருக்கு ஆபத்தான சூழலில் சாலையைக் கடக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே சில மாணவியர்கள் விபத்தில் சிக்கிகாயமடைந்துள்ளதாகவும், தினந்தோறும் அச்சத்துடன் கல்லூரிக்குச் சென்றுவருவதாகவும் கூறி பேருந்து நிலையத்தை கல்லூரி ஆர்ச் அருகே இட மாற்றம் செய்ய கல்லூரி தரப்பில் கோரிக்கையும் வைக்கப்பட்டுள்ளது.மேலும் இந்த பேருந்து நிலையம் பயன்பாடற்ற நிலையிலும் உள்ளது.

ஆகையால் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் அருள்கூர்ந்து கல்லூரி மாணவியர்களின் உயிர் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசு கலைக்கல்லூரி பேருந்து நிறுத்தத்தை கல்லூரி நுழைவுவாயில் (ஆர்ச்) அருகே உடனடியாக இடமாற்றம் செய்து மாணவியர்கள் பாது காப்பாக பேருந்தில் ஏறி இறங்க தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகளுக்கு (TNRSP) ஆவன செய்ய தங்களை கேட்டுக் கொள்கிறே இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.



கோவை வடக்கு மாவட்டம், காந்திபார்க் பகுதி, மேற்கு மண்டலம், வார்டு எண்: 73ல் 2025– 2026ம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது விநியோகக் கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதி கழக செயலாளர் சோமு (எ) சந்தோஷ், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் , துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி சக்திவேல், வட்டக் கழக செயலாளர்கள் குமரேசன், ராஜேஷ், தை.ரவிச்சந்திரன், மகேந்திரன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ஆ.தமிழ்மறை, மேற்கு மண்டலகுழுத்தலைவர் தெய்வானை தமிழ்மறை, நரசிபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் என்.ஆர்.கார்த்திகேயன் உள்பட மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.